## திராவிடத்தால் வாழ்கிறோம்

972

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

29

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# திராவிடத் தடத்தில் அழுத்தமான அடையாளம் கீழப்பாவூர்!

‘திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து தி.மு.கழகம் உதித்த பின்பும் பெரியாரின் மீதான ஈர்ப்பும், அவருடைய அடிநாதக் கொள்கைகள் மீதான பற்றும் பல ஊர்களில் அப்படியே நிலைபெற்றிருந்தது. கீழப்பாவூரும் அதற்கு விலக்கல்ல. கீழப்பாவூர் வழக்கறிஞர் வை.பாண்டிவளவன், பாவூர் நாவலர் இலக்குவனார், சு.இராமச்சந்திரன் தி.மு. கழக உடன்பிறப்புகள் சிலர், தீவிர பெரியாரிய பற்று கொண்டிருந்தனர்’ என்று கீழப்பாவூருக்கு அருகே உள்ள மேலமெஞ்ஞானபுரம் குறித்து எழுதியபோதே குறிப்பிட்டிருந்தோம்.

காரணம், இவர்கள் தி.மு.க.வில் மட்டும் இருக்கவில்லை, கீழப்பாவூரில் தி.மு.க.வினரே பகுத்தறிவாளர் கழகத்தையும் சேர்த்து இயக்கிவந்தனர். அரசியல் பணிகளை தி.மு.கழகத்தின் ஊடாகவும், சீர்திருத்தப் பணிகளைப் பகுத்தறிவாளர் கழகத்தின் வாயிலாகவும் மேற்கொண்டுவந்தனர். 1980-கள் முதல் 2000-ஆம் ஆண்டின் தொடக்கம்வரை மிகத் தீவிரமான பகுத்தறிவுப் பிரச்சாரத்தை இவர்கள் முன்னெடுத்தனர். தெருமுனைக் கூட்டங்கள், இருசக்கர வாகனப் பிரச்சாரம், இடைவிடாத போராட்டக் களங்கள், வழக்குகள், சிறைவாசம் என பகுத்தறிவாளர் கழகம் வீச்சாக இயங்கியது.

அதன் விளைவாக, சாதிய சுடுகாடுகள் மட்டுமே இருந்த கீழப்பாவூரில் பொது சுடுகாடு உருவானது. இறுதி ஊர்வலத்தில்கூட சாதிப் பாகுபாடு கூடாது என வாகனம் ஒன்றை பகுத்தறிவாளர் கழகம் வடிவமைத்தது.




> கீழப்பாவூர் என்றும் தி.மு.க. கோட்டையாகத் திகழ்வதற்கு, முக்கிய காரணம் பெரியார் காலத்தில் இருந்தே தொடரும் பகுத்தறிவுப் பிரச்சாரங்கள்தான். அதனால், கல்வியில் முன்னேற்றமடைந்து பெரும் சமூகப் - பொருளாதார மாற்றமும் கண்டிருக்கிறோம். திராவிட இயக்கத்தால் நாங்கள் பெற்ற பகுத்தறிவுதான் விழிக்கொடை, உடற்கொடை, ரத்ததானம் அனைத்துக்கும் காரணம்.
>
> **- பொன் அறிவழகன், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர், தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.**



பொன் அறிவழகன்

அனைத்து சாதியினரும் அந்த வாகனத்தைப் பயன்படுத்தினர். மூட நம்பிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரங்களால், சபரிமலைக்குச் செல்வோர் கூட்டம், கீழப்பாவூரில் கணிசமாகக் குறைந்தது. சமூகப் பணிகளோடு சேர்த்து நலிவுற்றோர் நலச்சங்கம், முத்தமிழ் மன்றம், வள்ளுவர் மன்றம் என எண்ணற்ற சேவை களையும் செய்துவந்தனர். அதன் நீட்சியாகத்தான் விழிக்கொடை இயக்கம், ரத்த தான இயக்கம், உடற்கொடை இயக்கம் என மகத்தான மானுட சேவைகளும் முளைத்தன.

பகுத்தறிவாளர் கழகத்தின் இந்த முன்னெடுப்புகள் இன்றைக்கு கீழப்பாவூரில் மக்கள் இயக்கமாகவே மாறிவிட்டது. சில தொண்டு நிறுவனங்களும், இப்போது அங்கு விழிக்கொடை சேவையில் ஈடுபட்டு வருகின்றன. திராவிட இயக்கத்தினரைத் தாண்டி, சாமானிய மக்களும் உடற்கொடை வழங்குவது, அங்கு இயல்பாக மாறியிருக்கிறது. அந்த மனநிலைக்குக் காரணம், கீழப்பாவூரைக் கட்டியெழுப்பிய கருப்பு-சிவப்பு கழகங்கள்.

பெரியார், அண்ணா மட்டுமல்லாமல், சமகாலத்தில் தி.மு.க. தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், ஆசிரியர் கி.வீரமணி, கொளத்தூர் மணி என எண்ணற்ற திராவிடத் தலைவர்கள் கீழப்பாவூருக்குச் சென்று நிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்களில் பங்கேற்றிருக் கிறார்கள். திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம் என சுமார் 50 குடும்பங்கள் கருப்புச்சட்டைக் குடும்பங்களாக உள்ளன. தி.மு.கழகத்தினரோ கருப்புச்சட்டை அணியாத பகுத்தறிவாளர்களாக உள்ளனர். அதனால்தான், 1996-க்குப் பிறகு இன்றுவரை கீழப்பாவூரில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் தி.மு.கழகம் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

திராவிட இயக்க வரலாற்றுச் சுவடுகளில், ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தில் ஒப்பிடமுடியாத வகையில், தனிப்பெரும் அடையாளமாக மிளிர்கிறது கீழப்பாவூர்.

...பயணிப்போம்.

## சமத்துவ முதலீடு - முன்னோடி தமிழ்நாடு!

இந்தியாவில் பெயருக்குப் பின்னால் சாதி பட்டத்தைப் போடுவதை, ஒரு நூற்றாண்டுக்கு முன்பே தவிர்த்துவிட்ட மாநிலம் தமிழ்நாடு. அதற்குக் காரணம் தந்தை பெரியார். ஆனால் தமிழ்நாடு தவிர்த்து, இந்திய மாநிலங்கள் அனைத்திலும் இன்றளவிலும் பெயருக்குப் பின்னால் சாதியைப் பட்டமாகப் போட்டுக்கொள்ளும் வழக்கம் தொடர்கிறது. அந்த வழக்கத்துக்கு எதிராக, அலகாபாத் உயர் நீதிமன்றம் முதன்முதலாகக் குரல் எழுப்பியிருக்கிறது.

செப்டம்பர் 16-ஆம் தேதி அலகாபாத் நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பு ஒன்றில், “சாதிப் பெருமை பேசுவதை கைவிட வேண்டும். காவல்துறை தொடர்பான அனைத்து ஆவணங்களிலும் சாதி அடையாளங்களை நீக்க வேண்டும். பெயருக்குப் பின்னால், சாதி அடையாளத்தை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் தாயார் பெயரைக் குறிப்பிட வேண்டும்” என்று உத்தரவிட்டுள்ளது. பசுப் பாதுகாப்பு, மதக் கலவரங்கள், சிறுபான்மையினர் மீதான தாக்குதல் என இந்துத்துவா அமைப்புகளால் பெரும் அச்சுறுத்தல் உள்ள உத்தரப்பிரதேச மாநிலத்தில் இத்தகைய தீர்ப்பு வந்திருப்பது, கவனம் பெறுகிறது.

உத்தரப்பிரதேசம் மட்டுமல்ல, தமிழ்நாட்டைப் பின்பற்றி இந்தியா முழுவதுமே சாதிப் பட்டங்களை விட்டொழிய முன்வர வேண்டும். சாதியத்திற்கு எதிரான உரையாடலை, எல்லா வழிகளிலும் தொடர்ந்துகொண்டே இருப்பதுதான் நிரந்தரத் தீர்வைக் கொடுக்கும். அந்த வகையில், கடந்த நான்கரை ஆண்டுகளில் தமிழ்நாட்டில் காலனி பெயர் நீக்கம், பள்ளி வளாகத்திற்குள் சாதிப் பாகுபாடுகளைக் களைதல் என மாணவர்கள் மத்தியில் சமத்துவத்தை நிலைநாட்டும் எண்ணற்ற முயற்சிகளை, திராவிட மாடல் அரசு மேற்கொண்டுள்ளது.

இதுபோன்ற சமத்துவ முதலீடுகள்தான் அடுத்த தலைமுறைக்கான மானுடம் வளர்க்க உரமாகும். அந்த வகையில், பல படிகள் முன்னேறிய தமிழ்நாட்டைப் பின்பற்றி, உத்தரபிரதேசத்தில் ஒரு தீர்ப்பு வந்துள்ளது. அது, நீடிக்க வேண்டும். நிலைக்க வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### தாழையூத்து நகரில் தலைவர்!



தாழை எஸ்.கே.மாரிபாண்டியன்

2013-ஆம் ஆண்டு, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கழக நிகழ்ச்சிகளுக்காக திருநெல்வேலி மாவட்டத்துக்கு வருகைதந்தார். அப்போது, தாழையூத்து நகர விவசாய அணி அமைப்பாளர் பொறுப்பில் இருந்தேன். தலைவர், தாழையூத்து சங்கர் நகர் விடுதியில் இருந்தபோது, அவரை சந்தித்து மகிழ்ந்தேன்.

**- தாழை எஸ்.கே.மாரிபாண்டியன், துணை அமைப்பாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, திருநெல்வேலி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

79

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''



# அரசியல் என்பது பொழுதுபோக்கு அல்ல!

**அரசியல் மேக்-அப் போட்டு வீக் எண்ட் டூர் போகிறவர், தி.மு.க.வை மட்டுமே விமர்சனம் செய்கிறாரே?**

‘சட்டமன்றத் தேர்தல் வருவதால், ஆளுங் கட்சியான அரசியல் எதிரியை விமர்சித்துப் பேசுகிறேன்’ என்கிறார். ஜனநாயகத்தில் விமர்சிப்பதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு. ஆனால், அந்த விமர்சனங்களில் உண்மை இருக்க வேண்டும். ஏக்கர் கணக்கில் பொய்யை அளந்துவிடக் கூடாது. வீக் எண்ட் அரசியல்வாதி திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டத்தில் பிரச்சாரம் செய்தபோது, தி.மு.க. ஆட்சியில் ரோடு போடவில்லை என்றார். திருச்சி விமான நிலையத்திலிருந்து அவர் அங்கே சென்றபோது, என்ன நிலையில் சென்றார் என்று சந்தேகமாக இருக்கிறது. 4 மணி நேரம் பயணித்திருந்த நிலையை மாற்றி, 2 மணி நேரத்தில் செல்லக்கூடிய அளவுக்கு சிறப்பான சாலையை அமைத்திருப்பது தி.மு.க. ஆட்சிதான். முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் கான்ட்ராக்ட் மோசடி காரணமாக பத்து ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டுக் கிடந்ததை மூன்றே ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சி நிறைவேற்றியுள்ளது. எழுதிக் கொடுத்தவர்கள் தவறான விவரங்களைக் கொடுத்திருந்தாலும், எந்தப் பாதையில் பயணிக்கிறோம் என்பதைக் கூட அறியாத ஒருவர், தமிழ்நாட்டில் அரசியல் கட்சி தொடங்கியிருக்கிறார் என்பதையும் அவரது ரசிகர்கள் அவரை நம்புகிறார்கள், என்பதையும் என்னவென்று சொல்வது?

தன்னுடைய பிரச்சாரத்துக்கு தி.மு.க. அரசு கட்டுப்பாடுகள் விதிப்பதாகவும், மோடிக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் கட்டுப்பாடு விதிக்க முடியுமா என்றும் அவர் கேட்கிறார். கட்டுப்பாடுகளைத் தளர்த்தச் சொல்லி, நீதிமன்றம் சென்றதே அவரது கட்சியினர்தான். ஆனால் நீதிமன்றமோ, ஒரு கட்சியின் தலைவர்தான், வீட்டுக்கூரை மீதும் ஓடுகள் மீதும் ஏறி ஓடுகின்ற தனது தொண்டர்களை, மரத்தில் ஏறி மின்சாரக் கம்பியை உரசும் தொண்டர்களை, வாடகைக்கு எடுத்த நாற்காலிகளை உடைக்கும் தொண்டர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், பொதுச் சொத்துகளைச் சேதப்படுத்தினால், அதற்கான இழப்பீட்டை அந்தக் கட்சிகளிடம் வசூலிக்கும் திட்டத்தை அரசு உருவாக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. நீதிமன்றத்தை மீறினால், அவமதிப்பு வழக்கைச் சந்திக்க நேரிடும் என்பதால், தி.மு.க அரசு மீது பழிபோடுகிறார்.

தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். பேரணிக்குத் தடை விதிக்கப்பட்டதும், அதன்பிறகு, அந்த அமைப்பு நீதிமன்றத்துக்குச் சென்றுதான், பல கட்டுப்பாடுகளுடன் அனுமதி பெற்றது என்பதும், வீக் எண்ட் கட்சிக்காரர்களுக்குத் தெரியாது. அதுபோலவே, பிரதமர் மோடி ரோடு ஷோ நடத்தியபோதும் பா.ஜ.க.வினருக்கு 20 க்கும் அதிகமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாகவே இருந்தாலும் அவர்களின் நிகழ்வுக்கான இடம், ஊர்வலப் பாதை, போக்குவரத்து நிலவரம் உள்ளிட்ட பலவற்றையும் கருத்தில்கொண்டு கட்டுப்பாடுகள் விதிப்பதைக்கூட அறியாமல், அரசியல் கட்சியைத் தொடங்கியிருக்கிறார் என்பது அவர் மீதான பரிதாபம் அல்ல. அவரை நம்பி திரளும் இளைஞர்களின் எதிர்காலம் மீதான பரிதாபம்.

...வினா தொடரும்.

## மலரும் நினைவுகள்

### நள்ளிரவில் விடுதலை!

1965-ஆம் ஆண்டு, குடியரசு நாளை துக்க நாள் அறப்போராட்டமாகக் கடைப்பிடித்தபோது, கழகத்தினர் மீது காவல்துறையினரின் அடக்குமுறைகள் கட்டற்று இருந்தன. கைது செய்யப்பட்டவர்கள், 29.01.1965 அன்று விடுதலை செய்யப்பட்டனர். பொழுது விடிந்து விடுதலை செய்தால், பொதுமக்களுடைய வரவேற்பு சிறப்பாக இருக்கும் என்று கருதி, நள்ளிரவு 2 மணிக்கு, சிறையிலிருந்து தலைவர்களை விடுதலைசெய்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131